# தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகள்

B. Mathivanan[1] & Dr. B. Aarthi Saravanan [2]
[1]Ph.D.,R.Scholar/Periyar Thought & [2] Head, Dept. of Political Science.
Periyar Maniammai Deemed to be University
Thanjavur – 613 403.

58

**ஆய்வு சுருக்கம்:**

சங்ககாலம் முதல் தமிழர்களின் பண்பாட்டில் வரையறுக்கப்பட்ட, அனைவராலும் மிகுந்து போற்றப்படும் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடான இல்லற பண்பாட்டு வாழ்வியல் நெறிமுறைகள் இல்லற வாழ்வில் காணப்படுவதை பல்வேறு தமிழ் இலக்கியங்களில் மூலம் நாம் உணர முடிகிறது. அவர்களின் வாழ்கை மிக சிறப்பாக அமைந்ததற்கு அவர்கள் பின்பற்றிய பண்பாடும், ஒழுக்கமும் காரணமாக அமைந்துளையும் நாம் காணலாம். சங்க கால இலக்கியங்களில் தொல்காப்பியம் தொட்டு, பல்வேறு சிற்றிலக்கியங்கள், திருக்குறள் வரையில் தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகளும் பல்வேறு கலாசார பண்பாடுகளும், அணைத்து வகையுளும் ஒழுக்கம் எவ்வாறு பேணப்பட்டு வந்தது என்பதை நாம் இக்கட்டுரையுன் மூலம் அறியலாம்.

**திறவு சொற்கள்:**

சங்ககாலப் பாடல்கள், நெறிமுறைகளை வர்ணிக்கும் திருக்குறள்கள், பல்வேறு சிற்றிலக்கியங்கள், புதுக்கவிதைகள், கவிங்கர்களின் மேற்கோள் பாடல்கள் மற்றும் தமிழர் பண்பாட்டு ஒழுக்கம்.

**முன்னுரை:**

வாழ்வில் ஒழுக்கத்தை பேணி பாதுகாப்பதில் தமிழ்களின் வாழ்வியல் நெறிமுறைகளில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது . வருங்கால தலைமுறைக்கு இவைகளை எல்லாம் நாம் எடுத்து சல்வது மிகவும் அவசியமாகும், சங்க காலத்தில் பல்வேறு கவிங்கர்கள் பாடிய பாடல்களின் மூலமாகவும் ஆங்காங்கே இக்கட்டுரையில் சிறு சிறு உதாரணங்கள் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன.

**விளக்கம்:**

திருக்குறள், திருவள்ளுவர் என்னும் தனிப்பெரும் மேதையை அடையாளப்படுத்துகிறது. தமிழையும், தமிழரையும் திருவள்ளும் அடையாளப்படுத்துவதுடன், திருவள்ளுவர் போன்றோரின் அறிவுரைகளைப் பின்பற்றி நடக்காமல் போனமைக்குக் காரணங்கள் இருக்கலாம், இருக்கின்றன. ஏனெனில், திருவள்ளுவர் அறிவுரைகளைப் பரப்பி, சட்டமாக்கி நடைமுறைப்படுத்த, தகுந்த அரசும் இல்லை; அரசரும் நமக்கு அமையவில்லை எனலாம்.

திருவள்ளுவர் தம் திருவள்ளுவத்தை உருவாக்கிய போது மக்களிடம் பழகி நடைமுறை சிக்கல்களை நேரில் கண்டு தம் நூலில் தெரிவித்துள்ளதாக நமக்குத் தோன்றவில்லை. ஏன்னினும் ஊன்றி கவனித்து உரிய தீர்வுகளைச் சொல்லும் ஒரு சிறந்த சிந்தனையாளராகவே நமக்கு திருவள்ளுவர் தோன்றுகிறார். எனவே, அவர் கூறியுள்ள உயரிய கருத்துக்கள் அறிவுரைகள் அனைத்தும் மிகச்சிறந்த குறிக்கோள்களாகவும், அவற்றைப் பின்பற்றத்தகும் குறிக்கோள்கள், பின்பற்ற இயலாக் குறிக்கோள்கள் என இரண்டு வழிகளில் அவைகளை நாம் பகுத்தறிந்து பார்க்க

வேண்டியிருக்கிறது.

**ஒழுக்கம் சார்ந்த ஆண் பெண் பாலியல் கல்வி.**

**" பொழுது கண்டு இரங்கல் "** எனும் அதிகாரத்தில், தம் காதலன் பொருள் தேடுவதற்காக தலைவியை பிரிந்திருக்கும் காலத்தில், மாலைப் பொழுதைக்கண்டு தலைவி வருந்துவதாக எடுத்துக் கூறும் வள்ளுவர், **இக்காதல் நோய் காலையில் அரும்பிப் பகலில் மொட்டாகி மாலையில் மலர்கிறது.** என்பதை,

"காலை அரும்பிப் பகல் எல்லாம் போது ஆகி
மாலையில் மலரும் இந்நோய்" -(குரல் – 1227)

என்ற குறளின் மூலமாக, "அறத்துப்பாலில்" காதலி, காதலனின் பிரிவை மிகவும் இயல்பு நிலையில் விளக்குவதுடன்,

"பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு" -(குறள் – 1280) என்று

தன் எண்ணத்தை வெளியிடும் போது, குறிப்பால் அறிவுறுத்த வேண்டி, தன் காதல் நோயைக் கண்ணினால் கூறித் தன்னைப் பிரியாதிருக்க வேண்டுமென்பதை பெண்மைக்குரிய சிறந்த குணமாக விவரித்துள்ளார் திருவள்ளுவர்.

**பாரதிதாசனின் தலைவி கூற்று**

இதையே புரட்சிக்கவி பாரதிதாசன் "தலைவி கூற்று" எனும் பாடலில் தலைவனை நினைத்துத் தான் துயிலா திருத்தலைத் தோழிக்குத் தலைவி கூறுவதாக,

"ஆர்ப்புறும் இடிசோ கார்ப்பரு வத்துக்
கொல்லையின்" மணந்த முல்லைக் கொடியின்
சிறப்பென அரும்பி அரும்பு விரிக்கும் நாடனை
எண்ணித் துயில்நீங் கியஎன்
கண்கள் இரண்டையும் காண்பாய் தோழியே !

எனவும்,

தலைவன், தலைவியை மணம் புரியாமல் நெடு நாள் பழகி, ஒருநாள் வேலிப்புறத்திலே வந்து நிற்கிறான் ! அவன் காதில் விழும்படி, தலைவியை நோக்கிக் கூறுகிறாள் தோழி, "தலைவன் நட்பினால் உன் தோள் வாடினாலும் உன் அன்பை அது குறைத்து விடவில்லை". எனக் கூறுவதற்கு

"மிளகின் நீள்கொடி வளர்மலை பாங்கில்
இரவில் முழங்கிக் கருமுகில் பொழிய,
ஆண் குரங்கு தாவிய சேண்கிளைப் பலாப்பழம்
அறிவியல் ஊர் திரை பூத்துறை வரும் எழிற் குன்ற
நாடானது நட்புனில் தோளை
வாடச் செய்யினும் அன்பைமாயக் காதே" ! என்றாள்.

**குரளுக்கு சான்றாக நற்றினை:**

நற்றினையில் காணப்பெறும் பாக்கல் கருத்து ஆழம் மிக்கவை. இந்நூல் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களின் கருத்துக்களை எடுத்தாளும் வகையில் அமைந்துள்ளது. சான்றாக கீழ்காணும் குரளைக் கூறலாம்.

"பெயர்க்கண்டும் நஞ்சுண்டு அமைப்பவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (குறள்: 580)

இக்குறட்பா தமிழரின் பண்பாட்டையும் வளர்ச்சி நிலையையும் குறிக்க எல்லோராலும் பயன்படுத்தப்படும் ஒன்றாகும். இதே கருத்து திருக்குறளுக்கு முன் தோன்றியதாக குறிக்க பெரும் நற்றிணையில் காணப்பெறுகிறது.

"முந்தைய இருந்து நட்போர் கொடுப்பின்
நஞ்சும் உண்பா நனிநாகரிகர் -(நற்றிணை 335:6-7)

**திருக்குறளும் மானுட பண்பாட்டு இலக்கியமும்:**

இவ்வாறு தொகை நூல்களில் முதன்மையில் வைத்து என்னப்பெறும் நற்றினை பல சிறப்பு கூறுகளைப் பெற்றுத் திருக்குறளைப் போன்றே பெருமை சேர்க்கும் வண்ணமாக அமைந்துள்ளது.

**குறளுக்கு சான்றாக குறுத்தொகை:**

சங்க இலக்கியங்களில் பலரது ஆய்விற்கு உட்பட்டது குறுந்தொகை பாடல்கள். இவைகள் பழந்தமிழரின் ஆக வாழ்க்கையில், பல வரலாற்றுச் செய்திகளையும் அறிந்துக்கொள்ளப் பெருந்துணை புரிகிறது. பழந்தமிழரின் ஆக வாழ்க்கை முறையை உள்ளங்கை நெல்லிக்கனியாக உணர்த்தும் குறுந்தொகைபாவில்,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
யானும் நீயும் எவ்வழி அறிவதும்
செம்புலப் பெயநணீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்த னவே" (குறுந்தொகை : 40)

சங்க காலத்தில் அமைந்த பெரும்பாலான திருமணங்கள் களவு முறையில் தொடங்கியதாக இருந்தாலும் கூட உறவு முறை திருமணங்களாகவே காணப்பட்டது. இம்முறை மாறி உறவு அல்லாத இருவர் களவு மேற்கொண்டு கற்பு வாழ்க்கையில் கணவன் மனைவி ஆகியதற்கு கீழே தரப்பட்டுள்ள குறுந்தொகை பாடல் சான்று என அ. தட்சிணாமூர்த்தி அவர்கள் கூறுகிறார்.

"நிலத்திலும் பெரிதே வானிலும் உயர்ந்தன்று
நீரினும் ஆறள வின்றே சாரல்
கருங்கால் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பே"

எனும் (குறுந்தொகை: 3) யில்

தலைவனின் நட்பானது (காதல்) நிலத்தை விட பெரியதாகும், வானைவிட உயர்ந்ததாகும், கடலை

விட அளத்தற்கு அரியதாகும் எனும் பாடலில் மூலமாக நன்றி, உதவி குறித்து விளக்கத்தை திருக்குறளின் கருத்துக்கள் காணப்படுவதை நாம் அறியலாம்.

“காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது” - (குரல் : 102)

“பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது” - (குரல் : 103)

குறுந்தொகை பாக்கள் குறுகிய அடி வரையறைகளைப் பெற்றிருப்பதால், கற்பதற்கும் பொருளை எளிதில் புரிந்து கொள்வதற்கும் சிறந்த நூலாகத் திகழ்கிறது. இப்பாடங்களைப் பாடிய புலவர் பெருமக்களும் தாங்கள் சொல்ல வந்த கருத்துக்களை உவமைகள் வாயிலாகத் தெளிவாகப் பதிய வைத்துள்ளனர் என்பதை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**தமிழரின் “அழகு கொள்கை”**

பண்டைத் தமிழரின் அழகு கொள்கையிலும், “ஒழுங்கு” இசைவு, கவர்ச்சி, இன்பம் எனும் இயல்புகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடே **“அழகு”** எனும் புத்துலகச் சிந்தனையின் கூறுகள் அமைந்து இருப்பதை நம்மால் காண முடிகிறது. இந்த பின்னணியிலும் இலக்கிய படைப்பைக் கூர்ந்து நோக்கினால், இலக்கிய படைப்பில் தோற்றத்திற்கு மிக மிஞ்சிய அழகுநர்வே உந்துதலாகக் கருதுவது ஒருவகையில் மிகவும் பொருத்தமாக அமையும். இன்றைய இந்திய சிந்தனையில் அழகைவிட பயன்பாடு கலைப்படைப்பின் தலையாய் பண்பாய் போற்றப்படுகிறது. இதற்கு தமிழ் இலக்கியம் விதிவிலக்கு அன்று.

**முதுமையும் மனநிலையும்...**

“அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு மனிதனை
முதுமை அவ்வளவாகப் பாதிப்பது இல்லை” -பிளாட்டோ

மனிதனது வாழ்க்கை பயணத்தில் வரும் கடைசி நிலையை முதுமை; எனவே, அது ஒரு நோயல்ல! உடலில் ஏற்படும் பல்வேறு மாறுதல்களும், தளர்ச்சியும் முதுமையின் அறிகுறி என்று எண்ணினாலும், அது பெரும்பாலும் மனதைப் பொருத்தே அமையும். எந்த சமயத்தில் ஒருவர் தனது கடந்த காலத்தில் சுகங்களை நினைத்து ஏங்கி தனது எதிர்காலம் தக்க பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமோ?- என்று எண்ணிக் கலங்க ஆரம்பிக்கிறாரோ அந்த நேரமே அவர் முதுமை பருவமைப் அடைகிறார். எனவே, முதுமைக்கு அடிப்படை மனமே.

**போற்றப்படும் தமிழர் திருமணம்**

அன்று முதல்..... இன்று வரை..... சங்ககாலம் தொடங்கி.....
பண்டைத் தமிழகத்தில் திருமணம் ஒரு மதிப்புமிக்க சடங்காக கருதப்படுகிறது. மேல் வருணத்தார் மூவர்க்கு மட்டுமே உரிமையாக இருந்த இச் சடங்காகக் கீழ் வருணத்தாரும் கைப்பற்ற ஒரு காலம் பிடித்தது என்பது தொல்காப்பியம் தரும் செய்தி.

“மேலூர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டோ”... (தொல்பொருள் – கற்பியல், 3)

தோன்றின் போதோ, சமூக உயர்வு - தாழ்வு கற்பித்துப் பிறந்த நிறுவனமாகத் திருமணம் இருக்கிறது.

சங்க இலக்கியத்தில் காதலும், திருமணமும் உணர்வுகளைக் கிளரும் கருப்பொருள்கள் ஆகிவிட்டன. சங்க காலத்தில் நடைபெற்ற

திருமணங்கள் காதல் திருமணமோ?

பெற்றோர் ஏற்பாட்டுத் திருமணமோ? - என்பது குறித்து

போதுமான விவாதங்கள் நடந்து விட்டன. தமிழ்ப்பற்றுள்ள அறிஞர்கள் இப்ப பிரச்சனையை தொடும்போதெல்லாம் சங்ககாலத்தில் களவு மனம் பெருவழக்கில் இருந்தது களவு வாழ்க்கை இன்றி திருமணம் நடைபெறவில்லை என்று கூட கூறலாம் - என்ற உணர்ச்சிவசப்பட்ட முடிவுக்கே வருகின்றனர் சிலர்.

**"குடும்பம்"** என்ற சொல் முதலில் திருக்குறளில் தான் இடம்பெறுகிறது. சங்க இலக்கியங்கள் "குடி" என்ற சொல்லை ஆழ்கின்றன. குடி என்னும் சொல் தொழிலாலும் ஒத்த உறவாலும், நெருக்க முடைய குடும்பங்களில் தொகுதியைக் குறிக்கிறது என்னும் ஆய்வு முடிவுகள் இன்று நோக்கத்தக்கது.

குடி, பெற்றோர், அனுமதி, பொருள் ஆகியவை சங்க கால திருமண நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தின - இயக்கின என்பது வெளிப்படை "பெற்றோர்" என்பது கூட நழுவுகிற பொதுச் சொல்லாக இருக்கிறது. தந்தையே மகள் திருமணத்தை முடிவு செய்யும் அதிகாரம் பெற்றிருந்தான். தன்னை முறைப்படி வணங்காதவர்களுக்குத் தன் மகளைத் தந்தை மணம் முடித்துத் தருவதில்லையாம். "தன்தக, வணங்கார்க்கு ஈகுவான் அல்லன் (புறநானுறு 338) என்கிறது ஒரு புறப்பாடல்.

நெய்தல் நிலத்தின் "சுதந்திரவெளி" பிரதேசக்கட்டுமானங்களைத் தகர்க்கக் கூடியதாக இருக்கிறது. அது வானிகம் நடக்கும் கடற்கரையில் சுதந்திரவெளி. "நீ என்னைப் பார்க்க வரலாம்; தடையில்லை; எங்கள் ஊர் காரர்களுக்கு ஒருவரை இன்னொருவருக்கு தெரியாது. பிறர் வருவது யாருக்குத் தெரியப்போகிறது?" - என்ற தலைவி தலைவனுக்குத் துணிச்சலாக அழைப்பு விடுவது கடற்கரைப் பிரதேசத்தின் சாத்தியமாக இருக்கிறது.

"இனிவரின் தவறும் இல்லை; எனையாதும்

பிறர் பிறர் அறிதல் யாவது

தமர் தமர் அறியாச் சேரியும் உடைத்தேன்" (நற்றிணை; 331) அது மட்டுமல்ல, அந்த கடற்கரைப் பிரதேசத்தில், மகளை கடுங்காவல் காப்பவராகவும் தாய் இல்லை.

எல்லோருக்கும் வெளியே வேலை இருக்கிறது. "சுறாமீன் தாக்கிய புண் ஆறி தந்தை மீண்டும் மீன் பிடிக்க கடலுக்கு சென்று விட்டான். தாய் உப்பை விட்டு நெல்லை வாங்கும் பொருட்டு உப்பளம் சென்று விட்டாள். இப்பொழுது வந்தாலும் தலைவி பார்ப்பதற்கு எளியவள்".

(குறுந்தொகை – 269) அன்று தலைவனுக்கு அனுப்பப்படும் தூதும் நெய்தலின் **"சுதந்திரவெளிக்குச் சாட்சி".** மற்ற திணைகளில் இந்த நிலை இல்லை. "வராதே!" - என்ற அச்ச குரல் எப்போதும் கேட்கிறது. அம்மா மீதும் பிறர் மீதும் உண்டான அச்சமே இதற்கெல்லாம் காரணமாக அமைந்துள்ளதை நாம் காண முடிகிறது. காளையடக்கித் திருமணம் செய்யும் நிகழ்ச்சி முல்லையில் மட்டும் நடப்பது

முல்லையின் தனித்துவமாக இருக்கிறது. ஒவ்வொரு பிரதேசமும் இத்தகைய தனித்துவத்தை பெற்றிருக்கிறது.

**பெண்ணை தாரை பார்த்துத் தருதலும், தீ வலம் வரும் சப்தபதிச் சடங்கும்,** இடைக்காலத்தில் தான் பிரபலம் பெறுகின்றன.

தலைவலை, அரிவை விலை எனச் சங்க காலத்தில் பல பெயர்களில் நிலவி வந்த **"மணப்பெண் பரிசு"** (பரிசம்) படிப்படியாகக் கைவிடப்பட்டு; மணமகனுக்காக சீதனமாக மாற்றம் பெறுகிறது. பரிசம், சீதனம் இரண்டுமே, பெண்ணே ஒரு பொருளாக கருதிய நடைமுறைதான். முன்னதில், பெண்ணுக்கு ஒரு மரியாதை இருப்பது போன்ற தோற்றம் இருக்கிறது. அது, வெறும் தோற்றம் தான். சீதனமோ ஒரு சமூகக் குற்றமாகும். குணமாலையின் தந்தை பொருள் பொன் பொருளோடு இனம் பெண்களையும் சீவகனுக்குச் சீதனமாகத் தந்ததாகச் சீவக சிந்தாமணி பாடுகிறது.

"அருள் இலஞ்சி வேலர் தமக்கொரு

பெண்ணைக் கொடுத்தோம்; ஆதீனத்து

மலைகள் எல்லாம் சீதனமாய் கொடுத்தோம்" - என்று

சீதனம் தந்த பெருமைகளை எல்லாம் குதூகலித்துப் பாடுகிறது. **குற்றாலக் குறவஞ்சி** இடைக்காலத்திலும் தமிழர் திருமண முறையில் ஏற்பட்ட மாற்றங்களில் முற்போக்கான மாற்றம் ஏதுமில்லை! என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக நமக்கு காட்சியளிக்கிறது.

**பெருமை சேர்க்கும் பெண்ணின் பேச்சு.....**

**"குறும்புப் பேச்சுக்குள் ஒரு குரூரம்"** சில சமயங்களில் மறைந்திருந்து பெண்ணை பேச வைப்பதெல்லாம், இக்கதைகள் நமக்கு காட்டுவதாக அமைந்துள்ளது.

வீட்டு பொருளாதாரத்தை, எந்தவித உழைப்பின்றி விழுங்கும் போலி சன்னியாசிகளைக் காயம் உண்டாக்காமல் வீட்டை விட்டு வெளியேற்ற பெண் கையாண்ட ஏமாற்றுதல் உத்தி **நியாயமானாலும்: வரவேற்கத் தக்கதுமாய்** நவீன இக்கால உலகிலும் பெரிதும் மதித்த போற்றத்தக்கவை அமைந்துள்ளது...

**வீட்டுக்குள் மனிதர்கள்...**

மகன், மருமகன், கணவன், தந்தை என வரும் ஆண் பாத்திரங்களையும் தாய், தமக்கை, மாமியார் என வரும் பின் பாத்திரங்களையும் வீட்டுக்குள் பெண் எவ்வாறு எதிர்கொள்கிறார் என்பதையும் விளக்குவதுடன்.

**முடிவுகளில் வேறுபாடுகள்....**

**"வாழ்க்கை விருப்பம்"** - உள்ள கதைகளில், மனிதர்கள் எவ்வாறேனும் போராடி வெற்றி பெற விரும்புகிறார்கள். **"மரண விருப்பம்"** - உள்ள கதைகளில், மனிதர்கள் சோர்வும் கசப்பும் அடைந்து தன் மரணத்தை யாவது அல்லது பிறர் மரணத்தை யாவது காண விரும்புகிறார்கள்.

இருட்டறையில் உள்ளதடா உலகம்:

சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே!

- புரட்சிக்கவி பாரதிதாசனின் வரிகளுக்கேற்ப...

சாதி வேறுபாடு, சாதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் கோரக் கொடூரம் பற்றி முற்றிலும் அறியாத வெகுளிப் பெண்ணானவள், பார்த்ததும் ஓர் ஆடவன் மீது காதல் கொள்கிறாள்.

**"எழுச்சி ஊட்டும் எண்ணங்களில்" ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்...**

வானில் மிதக்கும் விண்மீன்களை
அடைய முடியவில்லை என்பது
ஒரு பிரச்சனை இல்லை.
ஆனால் விண்மீன்களை அடைய
வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் தான் பிரச்சனை.

**தமிழுக்கு இனிமை சேர்க்கும் பல்வேறு இலக்கிய ஆராய்ச்சிகள்...**

-டாக்டர் மு. வரதராசன் அவர்கள்....

( ஒரு கண்ணோட்டம்)

ஒருவர் ஒரு பூந்தோட்டத்திற்கு செல்கிறார். பூக்களில் பலவகை நிறங்களையும் பலவகை மனங்களையும் கண்டு முகந்து மகிழ்கிறார். பூஞ்செடிகளில் இயற்கைழகில் ஈடுபடுகிறார் தம் ஊருக்குச் செல்கிறார்.

தாமும் அது போல் ஒரு பூந்தோட்டம் வைக்க முயல்கிறார்; ஒவ்வோர் அரும்பையும் பூவைவும் புது நிறத்தையும் புது மணத்தையும் கண்டு கண்டு மகிழ்கிறார். இலக்கிய உலகத்தில் திளைத்த ஒருவர் இயற்றும் பாட்டு அவருடைய தொண்டைப் போன்றது தான்.

புகழப் பழகவே நட்பு சிறப்புப் பெறும்; பயிலப் பயிலவே இலக்கியமும் சிறந்து நிற்கும். கண்டவர்களோடு எல்லாம் முகம் மலர்ந்து பேசும் மேற்போக்கான பழக்கம் இக்காலத்தில் மிகுந்திருந்தலை காணலாம். ஆதலால், ஆழ்ந்த அன்புடைய நண்பர்கள் உலகில் இல்லாமல் போகவில்லை. அவர்களுக்குச் சிறப்பிடம் இருந்தே வருகின்றது. அதுபோலவே, ஒரு முறை இருமுறையில் படித்து பயன்பெறத்தக்க உரைநடை இலக்கியம் பெருகிய போதிலும், பலமுறை கற்றுக் கற்று உணர்ந்து உணர்ந்து பயன் பெற தகுந்த பாட்டும் சிறப்பிடம் பெற்ற வாழும்.

எனவே, நாம் நமது வாழ்வில், மிக நாடிய பிறகு, கொள்ளல் தள்ளல் வேண்டும் அன்றோ? குணம் மிகுந்ததை கொள்ள வேண்டும்; குற்றம் மிகுந்ததை தள்ள வேண்டும். அப்போதும் கண்மூடி ஏற்றுக் கொள்ளாமல் முழுவதும் இத்தகையது என்று போற்றாமல் மிகுந்திருக்கும்.

பண்பு பற்றிய ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறு குறை பற்றி ஒன்றைக் கண் மூடி ஏற்றலும் கூடாது. இதுவே **"மிக்க கொளல்"** திருவள்ளுவர் கூறிய ஆராய்ச்சி முடிவாகும்.

"குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்".

## REFERENCES:-

1. டாக்டர் ரா. ருக்மணி, "சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்", நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்., அம்பத்தூர், சென்னை 98). முதல் பதிப்பு டிசம்பர் 2011
2. பெ. மாதையன், "அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக் கவிதை மரபும்", பாவை

பப்ளிகேஷன், ராயப்பேட்டை, சென்னை 14. முதல் பதிப்பு: டிசம்பர் 2009.

3. முனைவர் சி. பாலசுப்பிரமணியம், “தமிழ் இலக்கிய வரலாறு”, பாவை பப்ளிகேஷன், ராயப்பேட்டை, சென்னை 14. மூன்றாம் பதிப்பு ஜூலை 2014.
4. டாக்டர் மு. வரதராசன், “இலக்கிய ஆராய்ச்சி”, தாயக வெளியீடு , காற்றன் அச்சகம், சென்னை – 1. நான்காம் பதிப்பு: 1967.
5. முனைவர் ந. அறிவுராஜ், முனைவர் ஆ. குமார், “தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்” ,பாவை பப்ளிகேஷன், ராயப்பேட்டை, சென்னை - 14 .முதல் பதிப்பு: ஜூன் 2010.
6. அ.ச. ஞானசம்பந்தன், “இலக்கியக் கலை”, பாவை பப்ளிகேஷன், ராயப்பேட்டை, சென்னை 14. முதல் பதிப்பு: மே 2010.
7. பாவேந்தர் பாரதிதாசன், “பாரதிதாசன் கவிதைகள்”, மணிவாசகம் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 108 , பிப்ரவரி 1999.”மறு பதிப்பு”.
8. திருமதி.ம. லைலா தேவியின், “நாட்டுப்புற கதைகளில் முடிவெடுக்கும் பெண்கள்” முதற்பதிப்பு: நவம்பர் 2014, அறிவிமாலை வெளியீடு, சென்னை 93.
9. சு. பொ. அகத்தியலிங்கம், “சாதியம் – வேர்கள், விளைவுகள், சவால்கள்” - மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட் 2014 ; வெளியீடு : பாரதி புத்தகாலயம், சென்னை – 18.
10. ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், “எழுச்சி ஊட்டும் எண்ணங்கள்”, நான்காம் பதிப்பு, ஆகஸ்ட் 2015. வெளியீடு: நியூ செஞ்சுரி புத்தக நிலையம் (பி) லிட்., சென்னை – 98.